உ

முருகன் துணை

# மகாத்மா காந்தியும்
# மற்றுமுள்ள தேசாபிமானிகள்
# மகுத்துவ ஆனந்தக்களிப்பும்

கீர்த்தனையும் அடங்கியது.

31 MAY 1922



இவை

திருநெல்வேலி புஸ்தகவியாபாரம்

A. பலவேசம் பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு ஷையாரால்

திருநெல்வேலிப்பாலம்

ஸ்ரீ காந்திமதி விலாஸம் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1922 காப்பி 1000

ரிஜிஸ்டர் காப்பி ரைட் [அணா 2

N22
184425

உ



# மகாத்மா காந்தியேரில்

## பக்திரஸ கீர்த்தனை

———— :O: ————

ஆண்டருள் ஈசா என்றவர்ண மெட்டு

காந்தியின்மொழியே—கண்ணினர்க்குவிழியே மகாத்மா

1. சாந்தவேதாந்த மாகி
சமர்த்தான காந்தியோகி
பாந்தமாய் குட்டினத்தை
பரவும்படி செய்துவைத்த

2. நாட்டுக்கதர் நூலை
நண்பர்கள் யாபேரும்வாங்கி
சுத்தமுடன் நெய்துமிக
சொகுசாக உடுத்தச்செய்த (கா)

2. அபயமென்று கேட்டுவரும்
அன்பான சகோதரர்க்கு
நெய்யும்படி கதர்த்துணியை
நேருக ஒதி வைத்த (கா)

4. பெண்டுகளும் பிள்ளைகளும்
பின் சோர்வையடையாமலே
என்றுமே சாதம்உண்டு
இருக்கும்படி எடுத்தோதிய [கா]

31 MAY

5. கள்ளுச் சாருயவெறி
கஞ்சா அபின்கள்வெறி
உள்ளபடி தள்ளியே நீர்
ஒருமிக்கவாறு மென்றே [கா]

6. ஒற்றுமை யாமைக்காக
ஊக்கம் புகட்டவந்த
சித்தம் தெளிந்த ஞானி
தேவாதி தேவமகா ! [கா]

7. அட்ட திக்குகளெல்லாம்
சட்டமதாய் கதர்த்துணியை
கட்டிடவே நிர்மயமாய்
கனியமுது ஊட்டியகல் [கா]

8. மகம்மதலீ சவுக்கதலீ
மகா மேதாவிகளும்
சிகத்தில் தேவருய் விளங்கும்
தேர்ந்த மகாகாந்தி யோகி [கா]

9. சத்தியத்தை நீங்களுமே
தவருதீர் எங்கணமே
புத்தி இதே புத்தி இதே
பொறுமையுடன் கேட்பீர்என்றே [கா]

10. இருக்கிறோம் ஜயில்தனிலே
இருபத்தை யாயிரம்பேர்
பெருக்குங்கள் கதர்த்துணியை
பெலமாக இந்தியாவில் [கா]

11. அகிலமெல்லாம் ஆதரிக்கும்
அன்பே பாரத மாதா
மகிமையுடனே பணிந்து
வாழ்வீர்கள் எக்காலுமே [கா]

காப்பக நூலகம்
184425

அமாரநபிமேரே—என்றமெட்டு

பல்லவி

உலகத்துக்கேமிக்க அமுதூட்டும்—காந்திமகான் [உல]

அநுபல்லவி

உருகிவாடுறஏழை பெருகி நற்சுகம்பெற
சுருக்காகருட்டிணத்தை செய்து முடித்தபூமான் [உல]

தோகையரு

உலகத்தார் உய்யும் நற்கீதைதனை பெலம்பெற்றே
நன்மொழிந்த பூமான்
நலம் பெற்றே எல்லோரும் நல்வழிசேர்க்க
ருட்டிணச்சுருகி கோமான்

பாட்டு

கிருகிறெணச்சுழலும் அரிஹரி ஆயுதத்தை
பரிசுரம் செய்துமிக பரவும்படியே செய்தார் [உல]

தோகையரு

வெரிவியாய்த்திரிந்து விருதாவாய்குடித்து
வெரிகூட்டிடும் அன்பரே
பெருகவேமக்களும் பேரின்ப முத்தியும்பெறவே
நிறுத்துமன்பரே
என்று பெரிய வர்தனம்பாடி பெரும்வெரிஓடும்படி
இகபரபலரெல்லாம் புகள்பெற்றே சேரும்படி [உல]

---

கண்ணிகள்.

மகாத்மா காந்திப்பரதேசி பாரத
மாதின் விசுவாசி
சுகாத்மா காங்கிரஸ்நேசிநீதி நூல்
சொல்லும்பிர காசி

சத்தியகிரக வேதாந்தி மோகன்
தாசனும் காந்தி
ஒற்றுமை காணகுண சாந்திதிலகரின்
உண்மை சொல்லேந்தி

இந்தியா தேசபொக்கிஷமே மகாத்மா
எழுதும் சித்திரமே
சுந்த ஞானவிர்ப்பனமே
சங்கரனருளும் வந்தனமே

---

குருக்குத்துரைவேலவா—என்றமெட்டு

பல்லவி

மூகம்மதலி சோதரர் சவுக்கதலி சுதேசசவுக்கதலி [மு]

அனுபல்லவி

செகமெல்லாம் தீன்ஒலி இகபரமேல்சொலி [மு]

தொகையரு

அகமதிலனுதினம் இகபரச் சுதந்திரம் அனுகவே
வகைதேடிய தீறர்
செகமெல்லாம் கதறுடை வகையுடன்றேங்கிய
பிரசங்க வீறர்

---

பாட்டுத்தொடர்

விகர்நீக்கி குடிகார மனம்ஈசாக்பதம்சேர
சுகதினம் நோம்புகூடி ஆண்டவன்பாதம்தேடி.

(பல்லவியெடுப்பு)

விண்டு மொழிந்த வீரர்
வேதாந்த ஞானதீறர்
மூகமதலி சோதரர் சவுக்கதலி [மு]

---

காட்சி கண்காக்ஷியே—என்றமெட்டு

### பல்லவி

காந்தியின் நாமத்தை கண்யமுடன் துதிப்போம் (கா)

### அனுபல்லவி

சாந்தகுண வாய்ந்த மஹான் சத்தியம்தவரிடாத [கா]

### சரணங்கள்

உலகத்தை வெருத்திட்ட உண்மையுள்ள வாசரும்
ஊக்கமதாய் இந்தியர்க்கு பகாரஞ்செய்யும் தீரரும்
அழகுள்ள குஸ்ருத்திரியில் அவதரித்த நேசரும்
அன்பர்கள் போற்றித்துதிக்கும் இன்பமுள்ள தாசரும்
அஞ்சாமல் பிரசங்கஞ் செய்யும்ஞானி அவ
அண்டினோரை ஆதரிக்கும் தியாணி உரைக்கும்
வார்த்தை மதுரக்கர்க்கண்டு சீனி புவில்
உத்தமர்மகிழ் தேசாபிமானி

ஒற்றுமையாமையை
இத்ததியில் நாமுமே
நித்தியம் கையாளுவோமே
சத்தியம்செய்திடுவோம் இந்த (கா)

184425
தமிழ்நாடு
184425

### ஆனந்தக்கழிப்பு

1 உலகில் உதித்தபூமானே எங்கள்
உத்தம சத்திய காந்திமகானே

2 அகமதாபாத்து ஐக்கோர்ட்டு ஜட்ஜி
காந்தியின் மொழிகளை கடுகியே கேட்டு
இயம்பிய குற்றமும் மூன்று அதை
இனமாகச் சொல்லுவேன் நலியாமல் இன்று

3 நாட்டுக்குதர் நூல்நூற்று நீங்கள்
நாட்டுங்கள் கதருடையின் குற்றம் ஒன்றே
இந்துமுசிலீமும் ஒன்றே சேர்ந்து
இருங்களென்று சொன்னகுற்றமும் இரண்டே

4 கள்ளுச் சாருயத்தைஉண்டு நீங்கள்
கண்டபடி உளரி விண்டாதீர் என்று
சொன்ன காந்திகுற்றம் மூன்று என்று
மூன்றுக்கும் தண்டனை முடிவித்தே னென்றே

5 இரு மூணாண்டு ஜெயில் என்று ஜட்ஜீ
எழுதியே மனதுடன் இயம்பினர் அன்றே
இம்மொழி காந்தியும்கேட்டு இன்னம்
எத்தனைசெய்தாலும் அத்தனையும் பட்டு

6 நான்கொண்ட விரதத்தை விட்டு நானும்
விடமாட்டேன் னென்று உன்மனதிலே நாட்டு
போயருயுத்தத்தில் துன்பம் அங்கே
பெலமாக நாட்டிடசுதேசி அன்பர்

7 திரள்திரள்ளாகவே அன்பாய் அங்கே
சேர்த்து விட்டேன் யுத்தம்பார்த்துமே விட்டேன்
இவ்விசுவாசத்திர்க்காக நீங்கள்
இயம்பினீர் சிறைஇருமூணு வருடம்

8 பதினெட்டாம் வருடத்தில்தானே ஜெர்மன்
பயந்தோடும்படியா கப்படைகோர்த்தேன் நானே
இந்நன்றி செய்ததர்க்காக எனக்கு
இட்டீர் ஆருவருடம் சிறையுமே போக

9 இன்னமனேகமாய் நானும் செய்த
உதவிக்குழித்தீர் இருதங்கப் பதக்கம்

ஏழை வயிருர உண்ண நாளும்
எடுததுவிட்டேன் கதர்ருட்டிணம் முன்னே

10 உலகத்துக்கே சொன்னவாக்கு நீங்கள்
ஒருமிக்கச்சேர்ந்துமே கதர்மிக்க நோக்க
ருட்டினச்சுருதியைச்சுற்றி னாலே
நலமாக எடுத்துக்கதருடை சேர்த்து

11 ஜெகமெல்லாம் ஒற்றுமையாய கூடி
நீங்கள் செய்தாக்கால் சிறை விட்டு
வருவோம் கை கோர்த்து
சத்தியமாய் சொல்லுவேன் கேளு

12 பாரதமாதாவைத்தேடி நாமள்
நலமாக கதருடை பெறுகவே நாடி
ஆனந்தச் சந்தோஷம பாடி இந்த
அகிலமெல்லாம் மிக்க வாழுவோம் கோடி

——:o:——

தாதாபாய் நவ்ரோஜி—என்றமெட்டு

பல்லவி

அருள்காந்தி சுதேசி அருள்காந்தி [அ]

அனுபலலவி

அன்பாயிந்திய ரின்பால்வந்தவர் [அ]

சரணம்

மருப்படாதான அங்கம் ?
மாற்றுயர்ந்த காந்தித்தங்கம்
மாணிலக்கனியாக விளங்கிடும்
ஞானசிர்பா நாகிய சாக்குரு [அ]

தொகையரு

மாருக்சுயசித்தி அருள் காட்டி விளையாட்டில்
மனுவாய் வந்துதித்தசிலன்

சீருன தமிழ்ச்செல்வர் சிறைநீக்கப்புவிமீதில்
செனித்த கெம்பீரலோலன்

சரணத்தொடர்

தேசாபிமான கர்த்தன்
சித்தம் வைராக்கிய பக்தன்
சேமம் தங்கிய இந்தியரின் அபி
மானம் கண்டுளம் பொங்கிய சம்மந்தன் [அ]

செந்தூர் நாயகமே—மெட்டு

பல்லவி.

நாகூர் ஆண்டவனே உன்னை
நம்பினேன் கெதிதுன்பம் விலக
அன்பினேடுமே நாகூரினில் வாழும் [நா]

அனுபல்லவி.

மானிலந்தனில் தீராரோகங்கள்
தாவிஓடவேஸ்தம்பனங்கள் செய்யும் [நா]

சரணம்.

தக தகவெனு வொளிசிலர்
பலவினைகளைப்போக்கிட
அகமதினுனை அனுதினம்
திடமுடனுனைத்தொழுதிட [நா]
திரகடலோடிய தேடி வருங்கப்பல்
நாடி உன்னைத்துதித்தேனினி நின்றிட
ஏகமாயுந்தனை யேதுதி செய்திட
தாவி எழுதினேன்தான் வீரபத்திரனும்
தங்கலில்லா பொங்கமுடன் இங்கணமே
வந்தருள்செய்யும் [நா]

காந்தி பாட்டு முற்றிற்று

184425





## புஸ்தக விளம்பரம்

வந்துவிட்டது! வந்துவிட்டது!!

நண்பர்கள் யாபேரும் எதிர்ப்பார்த்திருந் தமகாத்மா காந்தியின் பக்திரஷக்கீர்த்தனம்.

இப்புஸ்தகம் கிடைக்குமிடம்

திருநெல்வேலிடவுன் வாகையடி முக்கில் மிட்டாய்கடைவைத்திருக்கும் நயன்சிக்குலாலா அவர்கள் கடையிலும்.

ஷை டவுன் தெர்க்குப்புதுத்தெரு A. பலவேஷம் பிள்ளை அவர்களிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

| | ரூ. | அ | பை |
|---|---|---|---|
| மகாத்மா காந்திபாட்டு | 0 | 2 | 0 |
| ஆண்டிப்பண்டாரம் பாட்டு | 0 | 1 | 0 |
| காப்பிக்குடித்தங்கம் | 0 | 1 | 0 |
| சொக்கர் அலங்காரம் | 0 | 0 | 6 |
| சுப்பிரமனியர் கீர்த்தனை | 0 | 1 | 0 |

எமது விலாசம்

பலவேசம் பிள்ளை புஸ்தகவியாபாரம்
தெர்க்குப்புதுத்தெரு திருநெல்வேலிடவுன்.